100 டன் என்று ஒதுக்கச் செய்தோம். பிறகு அது 120 டன் எனறு ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதையே 150 டன்னுக உயர்த்த முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.

SRI A. VEDARATHNAM: பல கோடிக்கணக்கான ரூபாய் கள் மூலதனம் தேவையுள்ள தொழில்களில், தனியார் துறையில் செய்ய அவர்களிடம் மூலதனம் இல்லாமல் இருப்பது காரணம் என்று விவரிக்கப் பட்டது. காஸ்டிக் சோடா பாக்டரிக்கு கோடிக்கணக்கான ரூபாய் மூலதனம் தேவையில்லை. அப்படி யிருக்க, அரசாங்கமே அதை எடுத்து நடத்தக் கூடாதா?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் கோடிக்கணக்கான ரூபாய் தேவையில்லை என்று சொல்லுவது தவறு. அப்படிக் குறைந்த செலவில் தயாரிக்கக் கூடிய நிபுணத் துவத்தை அவர்கள் கண்டு பிடித்திருந்தால், அதை அவர்களே செய்யலாம். அப்படியில்லை. அது ஒரு பெரிய தொழில்.

Employees' State Insurance Scheme

*434Q.—SRI S. M. ANNAMALAI: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தொழிலாளர் இன்ஷூரன்ஸ் திட்டத்தை வடாற் காடு மாவட்டத்திற்கு விஸ்தரிக்கும் திட்டம் உண்டா?

(ஆ) இல்லையாயின் காரணம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) The question of implementation of the Employees' State Insurance Scheme in Ranipet (North Arcot district) is under the consideration of Government.

*435 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state how far the Employees' State Insurance Scheme has been extended to the families of workers in this State?

THE HON. SRI R. VENKATARAMAN: The Employees' State Insurance Scheme has not been so far extended to the families of insured workers in this State.

SRI S. M. ANNAMALAI: வட ஆற்காடு மாவட்டம், ராணி பேட்டைக்கு எப்பொழுது இந்தச் சட்டம் அமுலுக்கு வரும்? அது தவிர, மற்ற நகரங்களுக்கு எப்பொழுது விஸ்தரிக்கப் படும்?

THE HON. SRI R. VENKATARAMAN: 1,500 தொழிலாளி கள் இருக்கும் இடத்திற்குத்தான் இந்த திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படும். அவ்வாறு பார்த்தால், ராணிப்பேட்டை யில் 1,500 தொழிலாளிகள் இருந்து இன்ஷூரன்ஸ் ஸ்கீமில் வரக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அதற்கு வேண்டிய முயற்சி செய்கிறோம்.